**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 166/2012**
**நாள்.17.04.2026**
**வா.சா.1- ராமசாமி**
**த/பெ - கருப்பணகவுண்டர்**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்து எனக்கும், எனது மகனுக்கும் பாத்தியப்பட்டது என்று பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

2. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களும், வழக்குரையில் உள்ள விவரங்களும் வழக்கறிஞரிடம் நான் தான் கூறினேன்.

3. பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் தாவா சொத்திற்கு அருகில் பிரதிவாதிகளுக்கு சொத்து இல்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு அருகில் மூன்றாம் நபர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துகள் தான் உள்ளன. அந்த சொத்துக்களை சுற்றி முள்வேலி போட்டுள்ளேன் என்றால் சரிதான்.

4. நீலமேகம்பிள்ளையிடமிருந்து பெரியசாமிபிள்ளை 14 ஏக்கர் 63 செண்டில் மேற்கு புறம் 2 ஏக்கர் 17 செண்ட் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் இதே சர்வே எண்ணில் நிறுத்திக்கொள்ளும் நிலத்திற்கு மேற்கு வடக்கு என்று நான்குமாலில் நீலமேகம்பிள்ளை கூறியுள்ளார் என்றால் சரிதான், ஆனால் அவ்வாறு குறிப்பிட்டிருப்பது தவறு.

5. பெரியசாமி பிள்ளையிடமிருந்து தாவா சொத்தை கிரையம் வாங்கும்போது சர்வே எண்.387/2 என்பது 387/2D யாகவும் மற்றும் பல சர்வே எண்கள் உட்பிரிவு ஆகியுள்ளது என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.4 ன் படி நான் பெரியசாமிபிள்ளையிடமிருந்து கிரையம் பெறும்போது சர்வே எண்.387/2D யில் 99 செண்டில் 78 செண்ட் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதே சர்வே எண்ணில் நீலமேகம்பிள்ளை வகையறா பூமிக்கும் மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அவர் நிலம்

வைத்திருந்தார்.

7. சர்வே எண்.387/2D முழுமைக்கும் கம்பிவேலி அமைத்துள்ளேன் என்றால் சரிதான்.

8. வா.சா.ஆ.3ன் படி நீலமேகம்பிள்ளையிடமிருந்து முருகேசன் 2 ஏக்கர் 80 செண்டில், 2 ஏக்கர் 70 செண்ட் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

9. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6ன் படி முருகேசனிடமிருந்து கிரையம் பெறும்போது 2 ஏக்கர் 73 செண்ட கிரையம் பெற்றுள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் பத்திரத்தை பார்த்தால் தான் கூறமுடியும்.

10. வா.சா.ஆ.5 மற்றும் 6 க்கு கட்டுப்பட்ட சொத்துக்களை கிரையம் பெறும்போது உட்பிரிவு செய்யப்பட்ட நிலையில் தான் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**12. என்னிடம் காட்டப்படும் வரைபடமானது தாவா சொத்திற்கான புலவரைபடம் என்றால் சரிதான், நகல், பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

13. சர்வே எண்.388/2B க்கு கட்டுப்பட்ட நிலத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.388/2B க்கு முன்புறம் சர்வே எண்.388/2A உள்ளது என்றால் சரிதான்

14. தாவா சொத்துக்கு அருகில் உள்ள ரோட்டில் இருந்தே வேலி அமைத்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.388/2Aவும் சேர்த்து வேலி அமைத்துள்ளேன் என்றால் சரிதான்.

16. சர்வே எண்.388/2A க்கான பட்டா 1ம் பிரதிவாதி கோவிந்தசாமி பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

17. தாவா சொத்துவிவரத்தில் தாவா சொத்துகளுக்கான நான்குமால் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான்குமாலில் குறிப்பிடாத காரணத்தினால் தாவா சொத்தை அடையாளம் காண இயலாது என்றால் சரிதான்.

18. எங்களுக்கு பாத்தியபட்ட தாவா சொத்துகள் அனைத்தையும் நான்குமால் குறிப்பிட்டு கிரையம் பெற்றுள்ளோம் என்றால் சரிதான். நான்குமாலில் பிரதிவாதிகள்

பெயர் வருவதால் அதை மறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான்கு மால் குறிப்பிடாமல் சொத்துவிவரம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

19. நீலமேகம்பிள்ளை 1ம் பிரதிவாதியின் தந்தை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பொறுத்து எனது பேரனுக்கு 2016ம் ஆண்டிலேயே ஆவண எண்.141/2016 ல் தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துவிட்டேன் என்றால் சரிதான். அதற்கான வில்லங்க சான்று பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது தாவா சொத்துக்களை அனைத்து எனது பேரன் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

20. தாவா சொத்துக்களை தற்போது எனது பேரன் பெயரில் இருப்பதால் எனது பெயரிலும், எனது மகன் பெயரிலும் விளம்புகை பரிகாரம் கோருவது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**